# அணையட்டும் இந்த அக்னி

வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி
18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011
email: deyeje@yahoo.com http/dajoseph50Megs.com

திருமால் மீது அன்பு கொண்ட திருவுள வாசகர்களே, வணக்கம் என் சென்ற கட்டுரையைப் படித்த சிலர் "பாவம் இந்த அக்னிஹோத்ரி, வயோதிக பிராம்மணர், வேதம் கற்றவர், ஏதோ



பிதற்றுகிறார், விஷயத்தை விட்டு விடுங்கள்" என்று அவருக்காக பரிந்து கொண்டு வந்தனர். முதுமைக்கும், வேத அறிவுக்கும், வருணத்துக்கும் அவர்கள் காட்டும் பரிவுக்கு நான் தலை வணங்குகிறேன். ஆனால் இவருடைய பிதற்றல் இவருடைய வீட்டுக்குள்ளேயே நடந்து விட்டால் அதைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். ஊரறிய, உலகறிய தவறான கருத்துக்களை எழுதுகிறார். இளம் உள்ளங்கள் பாதை தடுமாறுகின்றன. இந்து மனங்கள் புண்படுகின்றன. சமய நலனினும் சமுதாய நலனினும் அக்கறை கொண்ட ஒருவனால் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்க முடியாது. ஏனென்றால் எனக்கு மட்டுமல்ல என்னைப் போல் ஸ்தானத்தில் உள்ள எல்லோருக்கும் இந்த நேரத்தில் இதை தடுக்க வேண்டிய கடமை உண்டு. துகில் உரித்த துச்சாசனனைத் தடுக்காமல் சூது தர்மம் பேசி கைகட்டி நின்ற பாண்டவர்களையே கண்ணன் கொன்றிருக்க வேண்டும். திரௌபதியின் மங்களசூத்திரத்திற்காகப் பாண்டவர்களை விட்டுவைத்தான். இல்லாவிட்டால் நூறுபேர் கதையோடு இந்த ஐவர் சரித்திரத்தையும் கண்ணனே முடித்திருப்பான். கண்டிக்க வேண்டிய அறிவும், சக்தியும் உள்ளவர்கள், கண்டிக்கப்படவேண்டிய நபரை கண்டிக்காமல் இருப்பது தண்டிக்க வேண்டிய பாவம் என்று தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது.

நம் வணக்கத்துக்குரியவர்கள் அராஜகமாய் நடந்து கொள்ளும் போது அவர்களைக் கட்டிக் காவலில் வைக்க வேண்டியது நீதி, என்று இலக்குவன் ராமனிடம் சொன்னதை நீங்கள் வால்மீகி ராமாயணத்தில் வாசிக்கவில்லையா?

உலகுக்கு நல்வழி காட்டும் வேதங்களைக் கற்ற ஒருவன் வழி தவறி

நடந்து வேதங்களை துஷ்ப்ரயோகம் செய்வான் என்றால் அவனை வேத அறிவு சுமந்த கழுதை (வேத கர்தப:) என்று சாத்திரம் கூறுகிறது. இந்துமத நம்பிக்கையையும் சாத்திர மரியாதையையும் குலைக்கும் வண்ணம் தன் அறிவை வக்ரமாகப் பயன்படுத்தும் இந்த அக்னி ஹோத்ரி அந்தக் கழுதை ஸ்தானத்துக்கு இறங்கி விட்டார். கழுதை என்று இருந்தால் மனிதரிடம் அடி வாங்குவதும் உதை வாங்குவதும் சகஜம். சண்டிக் கழுதைக்கு தர்ம அடி கொடுப்பது உலக நீதி! இதில் வியக்கவோ வருந்தவோ ஒன்றுமில்லை.

நிற்க. அக்னிஹோத்ரி எழுதிய இன்னொரு கட்டுரை எனக்கு கிடைத்திருக் கிறது. அது கட்டுரை எண் 51. 8. 6. 2005 நக்கீரனில் வெளிவந்திருக்கிறது. இதில் விசிஷ்டாத்வைத வைணவத்துக்குத் தனக்கு அடுத்த நிர்வாஹகராக ஸ்ரீராமானுஜர் நியமித்த ஸ்ரீபராசரபட்டர் எழுதிய ஸ்ரீகுணரத்னகோசத்தை கேலி செய்திருக்கிறார் இந்த கிண்டல் பேர் வழி. பட்டர் எழுதிய இந்த மஹா உன்னத சாஹித்யத்தில் இருப்பதாக ஒரு பகுதியை இந்த தாத்தா எழுதி இருக்கிறார். இரவு நேரமாம். பராசரபட்டர் ஸ்ரீரங்கம் கோவிலில் தனியே இருந்தாராம். அர்ச்சகர்கள் யாரும் இல்லையாம். அப்போது ஸ்ரீ ரங்கநாத னுடைய ஆண் உறுப்பு கிர் என்று பறந்து ரங்கநாயகி சன்னிதிக்குள் நுழைந்து சிறிது நேரத்துக்குள் மறுபடி சர் என்று பறந்து ரங்கநாதன் சன்னிதிக்கு வந்து விட்டதாம். இதைத் தான் பார்த்ததாக பட்டர் எழுதி இருப்பதாக இவர் கூறி உள்ளார்.

இல்லாததை இருப்பதாகச் சொல்வதும், காணாததைக் கண்டதாகச் சொல்வதும் உலகியல் விவகாரங்களில் கூட பெருங்குற்றமாகக் கருதப்படுகிறது; அது பாவமும் கூட. ஆனால் இது சாத்திரம் சம்பந்தப்பட்ட விஷயம்: ஆன்மீகம்! வைதீகம்! அதிலும் வைணவம்! பட்டர் எழுதியதாக இவர் கூறும் அந்தப் பகுதியை நானும் தேடிப் பார்த்து விட்டேன். 61 சுலோகம் கொண்ட அந்த அற்புத பக்தி காவ்யத்தில் ஒரு இடத்தில் கூட அப்படி இல்லை. ஸ்ரீகுணரத்னகோசம் என்ற தலைப்பில் பல வித்வான்கள் முன்னிலையில் நான் சிறப்புச் சொற்பொழிவாற்றியிருக்கிறேன். ஸ்ரீ குணரத்னகோசத்தில் மறைமுகமாகக் கூட அப்படி ஒரு கருத்து எங்கும் சொல்லப்படவில்லை. 45–வது சுலோகத்தில் ஸ்ரீபட்டர், பெருமாள் – பிராட்டி இருவரின் உணர்வு நரம்புகளும் மகிழ்வெய்தின என்கிற பொருள் தொனிக்கும்படியாக நாயகநாயகி பக்தி பாவனையை வர்ணித்திருக்கிறார்.

ரஸநாடி என்று அவர் குறிப்பிடுவது உணர்வுகளை உள்ளத்துக்கு எடுத்துக் காட்டும் ஒட்டு மொத்த நரம்பு மண்டலத்தைத் தான். அங்கேயும் ஆண் நாடி ஆனந்த நாடி என்றெல்லாம் அவர் எழுதவில்லை. குடிகாரன் கண்ணனுக்கு பினாயில் பாட்டிலைப் பார்த்தாலும் சாராயக்கடை நினைவு தான் வரும். அது போல இவருக்கு நாடி நரம்பு என்றவுடன் ஆண் உறுப்பு நினைவுக்கு வந்து விட்டது. ஏனென்றால் இந்த வயோதிகத்திலும் இந்த அக்னிஹோத்ரிக்கு 24 மணி நேரமும் இதே நினைவாக இருந்திருக்க வேண்டும்.

இல்லாத ஒரு ஆபாசத்தை இருப்பதாகச் சொல்லி சிருஷ்டித்து அந்தப்

பழியை ஸ்ரீபட்டர் தலையில் போட்டு, தன்னைப் பவித்ரவாதி என்று சொல்லும் இந்த பழம் பெருச்சாளி யாரைத் திருப்தி செய்வதற்காக இப்படியெல்லாம் புளுகாட்டம் ஆடுகிறது என்று தெரியவில்லை. இவரைச் சுற்றி மேல் நாட்டுப் பணக்கார சீடர்கள் எந்நேரமும் சூழ்ந்திருப்பர் என்று கேள்விப்பட்டேன். அவர்களுடைய பணத்துக்கும் நிறத்துக்கும் இவருடைய நேர்மையும் மனசாட்சியும் விலை போகிவிட்டனவா என்ன?

என்னைப் போல் ஒரு சிற்றறிவினன் ஸ்ரீ குணரத்ன கோசத்தைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறேன் என்றால் இந்த நாட்டில் இன்னும் எத்தனை எத்தனை ஸம்ஸ்க்ருத வித்வான்களும், சாத்திர வித்வான்களும் இருக்கிறார்கள்? இவர் உளறுகிற ஊளைவாய் மொழியெல்லாம் அவர்கள் கவனத்துக்கு வராது என்று இவர் நினைக்கிறாரா? இந்த நாட்டில் அவரைத்தவிர வேதம் கற்றவன் வேறு யாருமே இல்லை என்று எண்ணுகிறாரா? அல்லது மனிதரே இல்லாத ஒரு தீவில் இருந்து கொண்டு இவர் மட்டும் பேசுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாரா?

இந்தக் கட்டுரையில் அடுத்து இவர் சாடுவது ஆண் ஆதிக்கம்! அதாவது ஆண்தெய்வம் கோவிலை விட்டு எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், பெண் தெய்வங்கள் மட்டும் படிதாண்டா பத்னிகளாக இருக்க வேண்டும் என்று ஒரவஞ்சனையாக இந்துமதம் சாத்திரம் எழுதிவிட்டது என்று, ஓநாய், ஆட்டுக்கு இரக்கப்பட்டதைப் போல பரிதாபம் காட்டுகிறார். ஆண் பெண் சமத்துவத்துக்காக அங்கமெல்லாம் துடிக்கும் இந்த அக்னி ஹோத்ரி, இடுப்பளவில் வேஷ்டியை உடுத்திக் கொண்டு, திறந்த மார்போடு போட்டோவுக்கு போஸ் கொடுத்திருக்கிறாரே அது போல நம் வீட்டுப் பெண்களும் இருக்க வேண்டும் என்கிறாரா? சமத்துவம் பேசும் இந்த சமதர்ம ஞானி ஆணின் உடல் அமைப்பும் பெண்ணின் உடல் அமைப்பும் இறைவனின் படைப்பில் வேறு வேறு விதமாக அமைந்துள்ளது என்பதை உணர்ந்து தானே வீட்டுப் பெண்களுக்கு ஜாக்கெட்டும் பிளவுஸூம் வாங்கித் தருகிறார்?

பெண்களைக் கூடுமானவரை வீட்டுக்குள்ளே பாதுகாப்பாக வைப்பது தான் பெண்களுக்கே நல்லது என்று இவருக்குத் தெரியாதா? காட்டுக்கு வந்ததனால் தானே கவர்ந்து செல்லப்பட்டாள் சீதை, நாட்டுக்குள்ளே, வீட்டுக்குள்ளே அவள் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? அதனால் தானே பெண்களைப் பாதுகாப்பாக நம்முன்னோர்கள் வீட்டுக்குள்ளே வைத்திருந்தார்கள்!

சீதையை ஒரு அரக்கன் தூக்கி கொண்டு போய் சிறை வைத்தது போல் ராமனை ஒரு அரக்கி சிறை வைத்தாள் என்று ராமாயணம் இல்லையே. இந்த 'அபிநவ ராமானுஜருக்கு' இது தெரியாதா? பெண்கள் படிதாண்டாப் பத்னிகளாக இருப்பது பெண்களுக்கு நாம் தரும் உயர்வு என்றும் இவர் அறிந்தவர் தானே! மரியாதை என்றும் பந்தோபஸ்து என்றும், இவர் அறிந்தவர் தானே! இதே பெண்மையின் இலக்கணத்தைத் தானே கோவில்களில் படிதாண்டா சன்னதிகளில்

கடைபிடிக்கிறோம். ஆண்கள் வெளியுலகில் சஞ்சரிப்பதுபோல் பெண்களையும் வரன் முறையில்லாமல் சஞ்சரிக்கச் செய்தால் கட்டிப்பிடிப்பவர்கள் எத்தனை பேர், கற்பழிக்கிறவர்கள் எத்தனை பேர் என்று கண்ட பிறகாவது அவர் உணருகிறாரா பார்ப்போம்!

அடுத்தபடியாக இவர் எழுதுகிறார்: 'ரங்கநாதன் தான் நள்ளிரவில் ரங்கநாயகியை நாடுகிறார். அதற்கு ரங்கநாயகி ஈடுகொடுக்கிறார். இது பரம பெண்ணடிமைத்தனம்' என்று. பிராட்டி, பெருமாளைச் சேர விரும்புவதாக எத்தனை பாசுரங்களில் சுலோகங்களில் படிக்கிறோம். பெருமாளுக்குத் தான் பிராட்டி தேவையா? பிராட்டிக்கு பெருமாள் தேவையில்லையா?

'கற்பூரம் நாறுமோ?' என்ற பாசுரத்தில் ஆண்டாள் பெருமாளின் அதரச்சுவைக்கு ஏங்கவில்லையா? உலகத்தில் பிள்ளை களைப் பெற்றெடுக்கும் பெண்கள் எல்லாம் உணர்ச்சியற்ற வெறும் கருங்கற்களாக இருந்து கொண்டு ஆண்களுக்காகத் தான் பெறுகிறார்களா? அவர்களுக்கு உள்ளம் இல்லையா? உணர்வு இல்லையா? இன்பம் இல்லையா? இயல்பாகவே அவர்களுக்கு உள்ள நாணம், அடக்கம், ஆகியவை அவர்களுடைய செயல்பாட்டைக் கட்டுப் படுத்துகிறது. ஆண் மகன் கண்களின் மேல் இமை என்றால் பெண்கள் கீழ் இமை ஆவார்கள். இரண்டுக்கும் இயக்கம் உண்டு. மேல் இமை கொஞ்சம் அதிகமாக இயங்கும். அவ்வளவு தான்!

இதில் பெண்ணடிமை எங்கே இருக்கிறது? பெண்களுக்குச் சார்பாகக் கதை எழுதினால், சினிமா எடுத்தால், இன்று கைதட்டு கிடைக்கும், காசு கிடைக்கும். அந்த கோஷ்டியில் இவர் சேர்ந்து விட்டார். ஆகா! பெண்ணுரிமைக்காக போராடும் இந்த பெரியவர்க்கு யாராவது ஓடிவந்து மாலையிடுங்கள் – ஆள் உயரத்துக்கு!

கலிபகவானின் கண்கண்ட அவதாரமோ இவர் என்று வியக்கும் வண்ணம், இவர் வார்த்தைகளை வாரி வீசுகிறார். அறியாமையின் ஒட்டுமொத்த அவதாரமான இவரோடு போரிட உருவிய வாளோடு, மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன். வணக்கம்.

பெருமதிப்பிற்குரிய ஆசிரியருக்கு.

நக்கீரன் இதழில் வயதான வைணவர் ஒருவர் எழுதிய கட்டுரையைப் படித்து மனம் துடித்தேன். வேதத்தையும் நம் தெய்வங்களையும் இவ்வளவு கீழ்த்தரமாகச் சித்தரிக்க முடியுமா? இதேபோல் வேறொரு மதத்தைப் பற்றி, அவர்கள் இறைவனைப் பற்றி இப்படி யெல்லால் எழுதினால், எழுதியவரும் அதை வெளியிட்டவரும் உயிருக்கு அஞ்சி அல்லவோ ஓடி ஒளியவேண்டும்! வெளியிலிருந்து கல் எறிபவர்களைச் சமாளிக்க வேண்டிய நாம், உள்ளிருந்தே கடப்பாரையால் இடிப்பவர்களை ஒன்றும் சொல்லக்கூடி முடியவில்லையே என்று கலங்கினேன். இதுபற்றி யாரிடமாவது கேட்டு சந்தேக விளக்கம் பெறலாம் என்றால் நான் மதிக்கும் பெரியவர்களிடமோ, பெற்றோர்களிடமோகூடக் கேட்கமுடியாதபடி அவ்வளவு ஆபாசமான கருத்துகள் எழுதப்பெற்றிருந்தன. மனத்திற்குள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில்தான் கீதாசார்யனில் வைணவச்சுடராழி திரு டி.ஏ. ஜோசம் அவர்கள் எழுதிய கட்டுரையைக் கண்டேன். என் கலக்கத்தை நீக்கி, மனப் புண்ணுக்கு மருந்திட ஆரம்பித்துள்ளது அக்கட்டுரை. என்னைப் போன்று அதிகம் தெரியாத, ஆனால் தெரிந்து கொள்ள விரும்பும் பக்தர்களுக்கு வரப்போகும் கட்டுரைகள் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. வாழ்க கீதாசார்யன்! வளர்க உம் திருப்பணி!!

– ரங்கம் பாலாஜி